சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

பு.சா. 01 திரு. வெங்கடேஸ்வரா த /பெ திரு. இராதாகிருஷ்ணன் , வயது 45 .

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி .–**

2. நான் எதிரிக்கு கடன் கொடுத்த தேதியில் வெற்று காசோலை கொடுத்தாரா என்றால் இல்லை09.10.2019 அன்று வெற்று காசோலையை எதிரி என்னிடம் கொடுத்தார். எதிரிக்கு நான் எவ்வளவு வட்டிக்கு கொடுத்தேன் என்றால் மாதம் ரூபாய் இரண்டு ரூபாய் போட்டிக்கு கொடுத்தேன் 10.03.2019 முதல் 09.10.2019 வரை எனக்கு மாதம் ரூபாய் இரண்டுக்கு வட்டி கொடுத்தார் என்றால் அவ்வாறு தான் பேசப்பட்டது ஆனால் எதிரி எனக்கு வட்டி கொடுக்கவில்லை. நான் பலமுறை எதிரியிடம் பணம் கேட்டதாக தெரிவித்துள்ள நிலையில் எங்கு வைத்து கேட்டேன் என்றால் வாணியம்பாடியில் உள்ள ரமேஷ் டிராக்டர் கடையில் வைத்து பலமுறை கேட்டேன். என்னுடைய செல்போன் என்னை நான் கடந்த மூன்று வருடங்களாக பயன்படுத்தி வருகிறேன் அதற்கு முன்பு நான் வைத்திருந்த செல்போன் எண்ணை நான் தொலைத்து விட்டேன். என் நண்பர் சிட்டிபாபு அவர்கள் செல்போன் என்னை எத்தனை ஆண்டுகளாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது அவரை தான் கேட்க வேண்டும். எதிரிக்கு நான் பணம் கொடுத்த போது அதற்கு ஈடாக எதிரியிடம் பாண்டு ஏதும் எழுதி வாங்கினேன் என்றால் இல்லை. நான் எதிரிக்கு வங்கியில் இருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தேனா என்றால் இல்லை என் கையில் வைத்திருந்த பணத்தை கொடுத்தேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் தற்போது விவசாயம் செய்து வருகிறேன் நான் முன்னாள் ராணுவ வீரர் ஆவேன். எனக்கு பென்ஷனாக தற்போது ரூபாய் 39 ஆயிரம் வருகிறது பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் ஒரு ஐந்தாயிரம் குறைவாக வந்திருக்கும். விவசாய மூலமாக நான் வருடத்திற்கு ரூபாய் மூன்று லட்சம் வருமானம் ஈட்டி வருகிறேன். நான் வருமான வரி

செலுத்தி வருகிறேன். எதிரிக்கு நான் பணம் கொடுத்த சமயத்தில் எதிரிக்கு ரூபாய் 2 லட்சம் கடன் கொடுத்ததாக வருமான வரியில் நான் காண்பித்து உள்ளேன் என்றால் இல்லை. எதிரிக்கு நான் பணம் கொடுத்த சமயத்தில் ரமேஷ் டிராக்டர்ஸ் உரிமையாளரை தவிர வேறு யாரேனும் இருந்தார்களா என்றால் எதிரியின் தாயார் வந்திருந்தார் ஆனால் அவர் கடைக்கு வெளியே நின்று கொண்டிருந்தார். நான் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியதற்கு பதில் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை. நான் கூறுவது போல் எதிரி என்னிடம் கடன் பெறவில்லை என்றாலும் காசோலை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு எதிரியை தெரியாது என்றாலும் எதிரிக்கும் சிட்டிபாபு என்பவருக்கும் தான் கணக்கு வழக்கு இருந்தது என்றாலும் அவர் கேட்டுக்கொண்ட அதன் பேரில் எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

Sd/-K.S.Dinesh.,B.A.,B.L.,(Hons)
Judicial Magistrate No.I,
Tirupattur.